தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2021 – 2022)

(பதினாறாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

மனுக்கள் குழு (2013–2014) அளித்த நாற்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகள் எடுத்த மேல் நடவடிக்கை குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள் 23.3.2022)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2021 – 2022)

(பதினாறாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

மனுக்கள் குழு (2013–2014) அளித்த நாற்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகள் எடுத்த மேல் நடவடிக்கை குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பக்கங்கள்

1. **2021–2022–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் அமைப்பு** - iii

2. **அறிக்கை** - v

இணைப்பு - I
குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுவின் விவரம் - 1 - 2

இணைப்பு - II
குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் - 5 - 12

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2021–2022)

(பதினாறாவது பேரவை)

(2021–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

முனைவர் கோவி. செழியன்,
அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

திரு. T.K. அமுல் கந்தசாமி

திரு. சீ. கதிரவன்

திரு. மு.பெ. கிரி

திரு. ஆ. கோவிந்தசாமி

திரு. கே.பி. சங்கர்

திரு. S. சந்திரன்

திரு. கோ. செந்தில் குமார்

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா

திரு. தே. மதியழகன்

திரு. சா. மாங்குடி

செயலகம்

முனைவர் கி. சீனிவாசன்	:	செயலாளர்
திருமதி இரா. சாந்தி	:	இணைச் செயலாளர்
திரு. மு. மோகன்ராஜா	:	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மனுக்கள் குழு (2021–2022)
(பதினாறாவது பேரவை)
இரண்டாவது அறிக்கை
முன்னுரை

2021–2022–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

2021–2022–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழு **08.03.2022–ஆம் நாளன்று தென்காசி** மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் கூடியது. அக்கூட்டத்தில் 23.12.2013–ஆம் நாளன்று அன்றைய ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று 2013–2014–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு 25.07.2014–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த நாற்பதாவது அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்ட தென்காசி மாவட்டத்திற்கு தொடர்புடைய 7 பரிந்துரைகளின் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கைகளை குழு மறு ஆய்வு செய்தது.

மறு ஆய்வு செய்யப்பட்ட 7 பரிந்துரைகளில் ஒரு மனுவின் மீது குழு தனது பரிந்துரையை அளித்தது. மீதமுள்ள 6 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகள் ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டன.

குழு பரிந்துரை வழங்கிய மனுவின் விவரம் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைக்கு 3 மாத காலத்திற்குள் துறை நடவடிக்கை எடுக்க குழு கேட்டுக்கொள்கிறது.

22.03.2022–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை – 600 009,
22.03.2022
பங்குனி திங்கள் 8–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு – 2053.

முனைவர் கோவி. செழியன்,
தலைவர்,
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுவின் விவரம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுவின் விவரம்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
1.	10416	திரு. A. பழனிவேல்சாமி, செயலாளர், மக்கள் நுகர்வோர் பேரவை, 13–2–52, பிள்ளையார் கோவில் தெரு, பூலாங்குடியிருப்பு, செங்கோட்டை வட்டம், தென்காசி மாவட்டம்.	செங்கோட்டை வட்டம், புளியரை முதல் செங்கோட்டை வரை ஹரிஹரா நதி ஆக்கிரமிப்புகளை அகற்றி விரிவுபடுத்த வேண்டுதல்.	ஹரிஹரா நதி ஆக்கிரமிப்புகளை அடையாளம் கண்டு அகற்றி விரிவுபடுத்த 2013–2014ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறவில்லை. வருகிற 2014–2015ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். (செயற்பொறியாளர், நீ.ஆ.அ./ பொ.ப.து சிற்றாறு வடிநிலக்கோட்டம், தென்காசி (இ) குடியிருப்பு, திருநெல்வேலி அவர்களின் கடித எண்.இவ(இ)3/கோ–6, நாள் 05.09.2013)	மாவட்ட ஆட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி, ஆக்கிரமிப்புகளை அகற்ற விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

ஹரிஹரா நதி ஆக்கிரமிப்புகள் தொடர்பாக வருவாய்த் துறையுடன் இணைந்து ஆக்கிரமிப்புகள் இருப்பின் எல்கைமால் அளந்து தர உதவிப்பொறியாளர் நீ.வ.து. பாசனபிரிவு, செங்கோட்டை அவர்களின் கடித நாள் 05.01.2022 மற்றும் 04.02.2022 ஆகிய தேதிகளில் வட்டாட்சியர், செங்கோட்டை அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. தற்போது ஹரிஹரா நதியில் ழுழுக்கொள்ளளவில் நீர் சென்று கொண்டிருக்கிறது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.
(கடித எண்.இவஅ–1/கோ–6/ நாள் 25.02.2022)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் குழுவிற்கு மன நிறைவு அளிக்கவில்லை. ஹரிஹரா நதி ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் உடன் தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க குழு வலியுறுத்துகிறது.

இணைப்பு – II

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
1.	10404	திரு. எஸ். முத்துசாமி மற்றும் பொதுமக்கள், குலசேகரப்பட்டி கிராமம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், தென்காசி மாவட்டம்.	குலசேகரப்பட்டி கிராமத்தில் 44 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதாகி உள்ளது. புதிய மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி கட்ட கோருதல் தொடர்பாக.	கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி ஊராட்சி, குலசேகரப்பட்டி குடியிருப்பின் மக்கள் தொகை 2006ம் ஆண்டு வாரிய மறு ஆய்வின்படி 1500 ஆகும். உச்சக்கட்ட மக்கள் தொகை 1872, உச்சக்கட்ட குடிநீர் தேவை 102960 லிட்டர் ஆகும். இக்குடியிருப்பில் இரண்டு திறந்த வெளிக் கிணறுகளை நீராதாரமாக கொண்டு 100000 லிட்டர் மற்றும் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பயனில் உள்ளன. அச்சம்புதூர், ஆய்க்குடி, கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் இக்குடியிருப்புக்கு 72000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பின் மக்கள் தொகைக்கு இங்கு ஏற்கனவே அமைந்துள்ள இரு மேல்நிலை தொட்டிகளும் போதுமானதாகும். மனுவில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த மேல்நிலை தொட்டி ஊராட்சியால் அமைக்கப்பட்டதாகும். (நிர்வாகப் பொறியாளர், த.கு.வ.வா. கிராம குடிநீர் திட்ட கோட்ட திருநெல்வேலி அவர்களின் 11.09.2013 ஆம் நாளிட்ட பதில்)	இது குறித்த கருத்துருவை மாட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிர்வாக பொறியாளர் விரைவில் அனுப்பி குலசேகரப்பட்டி கிராம மக்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
		(7)	(8)
		கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி கிராமத்தில் 2 திறந்தவெளி கிணற்றின் மூலம் 2020 – 2021–ஆம் ஆண்டு சட்டமன்ற தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் லிட்டர் மற்றும் நடப்பு 2020 – 2021 ஆண்டின் JJM திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. (ந.க.எண்.அ3–1884–2020, நாள் 25.02.2022)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2.	10407	திரு. P. முருகன் மற்றும் கிராம மக்கள், குலசேகரப்பட்டி கிராமம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், தென்காசி மாவட்டம்.	சர்வே எண்.442 குலசேகரப்பட்டி ஊராட்சி பட்டிபத்து குளத்திற்கு தண்ணீர் வருவதற்கான ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த குலசேகரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண்.442ல் பட்டிப்பத்துக்குளம் அழுதகண்ணியாறு பாசனத்தில் உள்ளது. கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு பருவமழை இரண்டும் சரிவர பெய்யாததால், மேற்படி குளம் மட்டும் அல்லாமல் அநேக குளங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், நன்றாக மழை பெய்த	சிற்றாறு வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களும், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களும் இணைந்து, மனுதாரர் குறிப்பிடும் இடத்திற்குச் சென்று ஆய்வு செய்து, உரிய கருத்துருவினை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 15 நாட்களுக்குள் அனுப்பி வைக்கும்படி குழு பரிந்துரை செய்கிறது.

காலங்களில் மேற்படி குளத்திற்கு சரியான அளவு நீர்பாசனம் கிடைத்துள்ளது. மேலும், மனுவில் குறிப்பிடப்படும் திட்டத்தினை ஆய்வு செய்ய சாத்தியக்கூறுகள் உள்ளதா? என்பதை கண்டறிய மனு அசலாக செயற்பொறியாளர், திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்புக் கோட்டம், திருநெல்வேலி–11க்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

(செயற்பொறியாளர், நீ.ஆ.அ. /பொ.ப.து சிற்றாறு வடிநிலக்கோட்டம், தென்காசி (இ) குடியிருப்பு, திருநெல்வேலி அவர்களின் கடித எண்.இவஅ3/கோ–6, நாள் 05.09.2013)

துறையின் இறுதியறிக்கை

(7)

தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், குலசேகரப்பட்டி குளமானது கீழ்க்காணும் இரு ஆதாரங்கள் மூலமாக தண்ணீர் பெறுகிறது.

1. செங்குளம் அணைக்கட்டில் உள்ள வைராவி கால்வாய் வழியாக வரும் அழுதகண்ணியாற்று நீர்.
2. குற்றாலம் புலியருவி நீர் தென்கால்வழியாக வழிமறிச்சான்குளம் மற்றும் செட்டிக்குளத்தை நிரப்பிய பின் உபரிநீர் அழுதகண்ணியாற்றில் விழுந்து மேற்படி குளத்தில் சேரும் நீர். இருப்பினும் தற்போது மனுதாரர் கோரியவாறு வழிமறிச்சான்குளத்தின் மூலமும் தண்ணீர் வழங்க ஆவன செய்யப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(கடித எண்.இவஅ/கோ–6/ நாள் 25.02.2022)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3.	10437	திரு. எஸ். காசிப்பாண்டியன், துணைச் செயலாளர், மாவட்ட விவசாயிகள் பிரிவு, 92 டி, நடுத்தெரு, வெள்ளக்கவுண்டன்பட்டி, அய்யாபுரம் அஞ்சல், சிவகிரி தாலுகா.	இராமசாமியாபுரம் ஊராட்சி, வெள்ளக்கவுண்டன்பட்டி வழியாக புளியங்குடிக்கு செல்லும் சாலையை சீர்செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
இராமசாமியாபுரம் ஊராட்சி, வெள்ளக்கவுண்டன்பட்டி வழியாக புளியங்குடிக்கு செல்லும் சாலையை மேம்படுத்தும் பொருட்டு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பணி ஆரம்பிக்கப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், (வட்டார ஊரட்சி), வாசுதேவநல்லூர், திருநெல்வேலி அவர்களின் கடித எண்.ந1/33371/2013, நாள் 05.09.2013)	சாலையை செப்பனிடும் பணியினை விரைவில் செய்து முடிக்க வாசுதேவநல்லூர், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், இராமசாமியாபுரம் ஊராட்சி, வெள்ளக்கவுண்டன்பட்டி முதல் அய்யாபுரம் வரை ரூ.24,00,000 (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம்) மதிப்பீட்டில் IGFF (Collecetor Discretionery fund) திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் A5/4639/2013 நாள் 28.12.2013 – ன்படி	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி தார்ச்சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(கடித எண் அ4–14–2021, நாள் 16.12.2021)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4.	10453	திரு. எஸ். பிரகாஷ், ஒன்றிய குழு உறுப்பினர் போகநல்லூர், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தென்காசி மாவட்டம்.	புளியங்குடி, கடையநல்லூர் (வழி) சிங்கிலிப்பட்டி, சங்கனாப்பேரி, மீனாட்சிபுரம், சுந்தரேசபுரம், போகநல்லூர் என புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கிடக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கோரிக்கையில் கேட்டுள்ள புதிய வழித்தடத்தில் அமைந்துள்ள கிராமங்களுக்கு ஏற்கனவே நகரப்பேருந்து வசதிகள் கீழ்க்கண்டபடி உள்ளது. 1. தடம் எண்.20 (நகரப்பேருந்து) – கடையநல்லூரிலிருந்து பால அருணாசலபுரம் (புதுக்கிராமம்) போகநல்லூர் விலக்கு, சுந்தரேசபுரம், மீனாட்சிபுரம் வரை (பள்ளி நேரங்களில்) – 4 சுற்றுக்கள் 2. தடம் எண்.3 – புளியங்குடியிலிருந்து சிங்கலிப்பட்டி, சங்கனாபுரம், சுந்தரேசபுரம் Outer வரை) – 6 சுற்றுக்கள்	போகநல்லூர் பகுதி பள்ளிக் குழந்தைகள் முதலமைச்சர் வழங்கும் பஸ் பாஸ் வசதியை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு காலை மற்றும் மாலை வேளைகளில், பள்ளிக்கூட நேரங்களில் பேருந்து வசதிகளை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

மேலும், கோரிக்கை தடத்தில் சங்கனாப்பேரிக்கும் கந்தரேசபுரத்திற்கும் இடையே ஆளில்லாத இரயில்வே லெவல் கிராசிங் உள்ளது என்பதால் பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது பாதுகாப்பு நலன் கருதி கோரிக்கையில் கேட்டுள்ளபடி புதிய வழித்தடம் இயக்க வாய்ப்பில்லை.

(பொது மேலாளர், த.அ.போ.கழகம் (திருநெல்வேலி) வ.து., திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் கடித எ.ண 10288/பிஎஸ்8/தஅபோக/திலி/2013–8, நாள் 16.09.2013)

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மனுதாரர் கோரிக்கையின்படி போகநல்லூர் கிராமத்திற்கு அரசுப்பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பது தெரிவிக்கப்படுகிறது. (SPL/01/TSI/TNSTC/2022, நாள் 01.03.2022)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5.	10472	திரு. பி. மூக்கையா, தலைவர், கம்பனேரி ஊராட்சி மன்றம், பால அருணாசலபுரம், கண்மணியாபுரம், தென்காசி மாவட்டம்.	கம்பனேரி ஊராட்சி, பால அருணாசலம் கிராமத்தில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி அமைத்தல் தொடர்பாக.

துறையின் பதிலுரை

(5)

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் கம்பனேரி ஊராட்சிக்குட்பட்ட பாலாஅருணச்சலபுரத்தில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி வரும் நிதியாண்டில் (2014–2015) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று முன்னுரிமை அடிப்படையில் செய்து தரப்படும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர், திருநெல்வேலி அவர்களின் கடித எண்.அ4/2423/2013, நாள் 10.09.2013)

குழுவின் பரிந்துரை

(6)

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ஏதாவது ஒரு நிதியின் கீழ் குடிநீர்த் தொட்டி கட்ட நடவடிக்கை எடுக்கும்படி குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

கம்பனேரி ஊராட்சி, பால அருணாசலபுரம் கிராமத்தில் ரேசன் கடை அருகில் மற்றும் வடக்கு புதுக்காலனியில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.
(கடித எண் அ3–3133–2021, நாள் 08.12.2021)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6.	10473	திரு. பி. மூக்கையா, தலைவர், கம்பனேரி ஊராட்சி மன்றம், பால அருணாசலபுரம், கண்மணியாபுரம், தென்காசி மாவட்டம்.	கம்பனேரி ஊராட்சி, கம்பனேரி கிராமத்தில் திறந்தவெளி கிணறு அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் கம்பனேரி ஊராட்சி கம்பனேரி கிராமத்தில் திறந்தவெளி கிணறு அமைக்கும் பணி வரும் நிதியாண்டில் (2014–2015) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர், திருநெல்வேலி அவர்களின் கடித எண்.அ4/2423/2013, நாள் 10.09.2013)	கம்பனேரி கிராமத்தில் திறந்தவெளி கிணறு அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
கம்பனேரி ஊராட்சி, கம்பனேரி கிராமத்தில் ஜல்ஜீவன்மிஷன் திட்டத்தின் மூலம் பணிகள் முடிவுற்று அனைவருக்கும் வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. (கடித எண் அ3–3133–2021, நாள் 08.12.2021)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கி. சீனிவாசன்,
செயலாளர்.